முச்சந்தி முரளி



"என்னதான் நாட்டில பஞ்சம் தலைவிரிச் சாடினாலும் உந்த வீராப்புக் கதையளுக்கு மட்டும் பஞ்சமில்லை பாருங்கோ"


# உதயன்

சுடர் : 37 | கதிர் : 266 | வெள்ளிக்கிழமை 19 ஓகஸ்ட் 2022 | ஆவணி 03 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50


# மனித உரிமைப் பேரவை அமர்வு இலங்கைக்கு சவால் இல்லை



## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

**கொழும்பு, ஓகஸ்ட் 19**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மாநாடு இலங்கைக்கு ஆபத்தாக அமையாது. அந்த மாநாட்டில் இலங்கை விவகாரங்களை விசேட குழு ஒன்று கையாளும். அதேவேளை, அந்த மாநாட்டில் இலங்கையின் நிலைப்பாட்டை அறிக்கையூடாக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பிப்பார் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

11 ➤

'ரணில் - ராஜபக்ச இராணுவத்தை விரட்டியடிப்போம்'

## கொழும்பில் மாணவர்கள் பேரணி நீர்த்தாரைப் பிரயோகம்: தடியடி

### ஒன்றியத் தலைவர் உள்ளிட்டோர் கைது



கொழும்பு, ஓக. 19

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க கொழும்பு - யூனியன் பிளேஸ் பகுதியில் பொலிஸாரால் நீர்த்தாரைப் 11 ➤

## கல்வி சமூகப் பிரச்சினைகள் அமைச்சர் சுசில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விரிவான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இந்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும், யாழ்ப்பாண மாவட்டத்துக் 11 ➤

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மீது

## அமைச்சர் காஞ்சன சி.ஐ.டி.யில் புகார்

கொழும்பு, ஓக. 19

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனம் ஆகியவற்றுக்கு எதிராக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

எரிபொருள் கொள்வனவு, பரிந்துரைகளை மதிப்பீடு செய்தல், முன்பதிவு செய்தவர்களுக்கு எரிபொருள் வழங்காமை, விநியோகஸ்தர்கள் தெரிவு மற்றும் விநி 04 ➤

## கோத்தா அடுத்த வாரம் இலங்கை வருவது உறுதி

### அவரது சட்டத்தரணியும் அமைச்சருமான அலிசப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19

நாட்டிலிருந்து தப்பியோடிய முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அடுத்த வாரம் இலங்கைக்கு வருவது 11 ➤

அறிவியல் நகரில்

## கல்வி அமைச்சர் சுசிலுக்கு சிங்கள மாணவர்கள் எதிர்ப்பு

### வளாகத்தில் இருந்து மாணவர்களை வெளியேறுமாறு அறிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 19

அறிவியல் நகர் தொழில்நுட்ப பீடத்தின் திறப்பு விழாவுக்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வருகை தரவிருந்த நிலையில் பெரும்பான்மையின மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று நடத்தியுள்ளனர்.

மாணவர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு அஞ்சி இறுதி நேரத்தில் அந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பங்கேற்கவில்லை. 04 ➤

## கட்டுப்பாட்டு விலை இல்லையேல் மேலும் விலை அதிகரிக்கக்கூடும்

எச்சரிக்கிறது நுகர்வோர் அதிகார சபை

விரிவு - பக். 11

கடன் மறுசீரமைப்பு பேச்சு

## இந்தியா, சீனாவை அழையுங்கள்

### ஜப்பானிடம் ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, ஓக. 19

கடன் மறுசீரமைப்பு பேச்சுக்கு சீனா, இந்தியா உள்ளிட்ட முக்கியமாக கடன் வழங்கும் நாடுகளை அழைக்குமாறு ஜப்பானிடம் கேட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதற்காக அடுத்த மாதம் ஜப்பான் செல்லவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## நல்லூரில் கலாசாபிஷேகம் இன்று!



யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வட திசையில் குபேர வாயில் கோபுரத்துக்கு உட்புறமாக, உட் பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ள 'குபேர திக்கு குமார வாசல் குமார ஸ்ரீ கோபுர கலாசாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை, கார்த்திகை உற்சவ தினத்தன்று காலை 6 மணி முதல் இடம்பெறவுள்ளது. (அ-ஒ-5)

விவசாயத் திணைக்கள

## முறைகேடுகளை விசாரிக்க விசாரணைக்குழு நியமனம்

### பணிப்பாளரை இடமாற்றிய பின்னர் ஆளுநர் இப்படியொரு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 19

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகவும் அது தொடர்பில் 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கெதிராக செயற்படின் மீண்டும் தடைவிதிப்போம்!

## புலம்பெயரிகளின் தடைநீக்கம் குறித்து பெரமுன ஜகத் குமார தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 19**

**தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள தனிநபர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டால் மீண்டும் தடை விதிக்கப்படும். அதற்குரிய சட்ட ஏற்பாடுகள் உள்ளன - என்று தெரிவித்துள்ளார் பெரமுன எம்.பி ஜகத் குமார.**

பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு, அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்போது தடை நீக்கம் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே பெரமுன எம்.பி. ஜகத் குமார மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உரிய ஆய்வுகளின் பின்னரே, சில அமைப்புக்கள் மற்றும் நபர்களைத் தடைப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்வதற்கான பரிந்துரையைப் பாதுகாப்பு அமைச்சு முன்வைத்துள்ளது. இதில் எவ்வித தவறும் கிடையாது. நாம் உலகுடன் இணைந்து பயணிக்க வேண்டும். தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள தனிநபர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் நாட்டுக்கு நேசக்கரம் நீட்டலாம். அல்லது குறைந்தபட்சம் வடக்கு, கிழக்கையாவது மேம்படுத்த உதவலாம். சிலவேளை அந்த அமைப்புக்கள் எமது நாட்டுக்கு, சட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டால் மீண்டும் தடைசெய்ய முடியும். அதற்கான ஏற்பாடுகளும் உள்ளன- என்றார். (ம-14,22)

# ஐ.எம்.எப்.உடன் ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகும்

## இம்மாத இறுதியில் குழு வருகை

கொழும்பு, ஓக. 19

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. விரைவில் சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கை கைச்சாத்தாகும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் மத்திய வங்கிஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிக்கையில்,

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தமே தீர்வு. சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடனான தனது பணியை கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி முடித்துக் கொண்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் தனது கொள்கைகளுக்கு இணங்க, இலங்கையின் இன்றைய இக்கட்டான சூழலில் உதவ அதன் நிலைப்பாட்டை மீளவும் உறுதிசெய்வதாகத் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் இம்மாத இறுதியில் சர்வதேச நாணயநிதியத்தின் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது. விரைவில் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை கைச்சாத்தாகும்- என்றார். (ச-இ)



# அமெ. குடியுரிமைக்கு கோத்தாபய முயற்சி!

கொழும்பு, ஓக. 19

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அமெரிக்காவில் தனது குடும்பத்துடன் நிரந்தரமாக வசிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோத்தாபய ராஜபக்சவின் மனைவி அமெரிக்கப் பிரஜை என்பதால் கோத்தாபய ராஜபக்ச கிறீன்கார்ட்டுக்கு தகுதியானவர். இதற்கென அமெரிக்காவிலுள்ள கோத்தாபயவின் சட்டத்தரணிகள் கடந்த மாதமே இதற்குரிய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் தற்போது கொழும்பிலுள்ள அவரது சட்டத்தரணிகள் மேலதிக ஆவணங்களை சமர்ப்பிக்கவுள்ளனர் எனவும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தாய்லாந்தில் தஞ்சமடைந்துள்ள கோத்தாபய ராஜபக்ச நவம்பர் மாதம்வரை தங்கியிருக்கும் தனது முன்னைய திட்டத்தை கைவிட்டு எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கை வரவுள்ளார் என ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரும் அவரது உறவினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டி தங்கியிருக்கும் ஹோட்டலிலிருந்து வெளிவரவேண்டாமென தாய்லாந்து அரசாங்கம் கடும் கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. இதனால் எதிர்பார்த்த நடமாட்ட சுதந்திரம் கிட்டாததனாலேயே தனது சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்து இலங்கை திரும்புவதற்கு அவர் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கோத்தாபய ராஜபக்ச திரும்பியதும் அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்கான பாதுகாப்பு உட்பட ஏனைய வசதிகளை வழங்குவது குறித்து அமைச்சரவை ஆராயும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ரெட்டாவுக்குப் பணம் சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, ஓக. 19

காலிமுகத்திடல் போராட்டத்தின் ஆரம்பம் முதல் முன்னணி செயற்பாட்டாளராக செயற்பட்ட 'ரெட்டா' என அழைக்கப்படும் ரதிந்து சேனாரத்னவின் தனிப்பட்ட வங்கிக்கணக்கில் 50 லட்சம் ரூபாவை வைப்பிலிட்ட சந்தேகநபர் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

பணம் வைப்புச் செய்யப்பட்ட அதே நாளில், ரதிந்து சேனாரத்ன இதுதொடர்பில் தனியார் வங்கியில் முறைப்பாடு செய்திருந்தார். பின்னர் அவர் தனது தனிப்பட்ட பேஸ்புக் பக்கத்தில், "தான் இவ்வாறான பொறிகளில் சிக்குவதில்லை எனவும் வர்த்தகம் மற்றும் கணக்கியல் தொடர்பில் தனக்கு கல்வித்தேர்ச்சி இருக்கின்றது. இதுவரை காலமும் போராட்டத்துக்காக தனது தனிப்பட்ட பணத்தைச் செலவு செய்து வரும் தன்னை இவ்வாறான பொறிகளின் ஊடாக சிக்க வைக்க முடியாது" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-14,இ)

# ரணிலின் வீடு தீக்கிரை: நீச்சல் வீரரிடம் விசாரணை!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு எரியூட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரபல முன்னாள் நீச்சல் வீரர் ஜூலியன் போலிங்கிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

குற்ற விசாரணைப்பிரிவில் நேற்றுமுன்தினம் ஜூலியன் போலிங் முன்னிலையாகியிருந்தபோது சுமார் 8 மணித்தியாலங்கள் விசாரணை முன்னெடுக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசாரணைக்குப் பின்னர் ஊடகவியலாளர்களுக்குப் பதிலளித்த ஜூலியன் போலிங், நான் ஏதேனும் பிழை செய்திருந்தால் அதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயார். ஜனாதிபதியின் வீடு அமைந்துள்ள வீதியிலேயே எனது வீடு அமைந்துள்ளதால் இவ்வாறு விசாரணை செய்யப்பட்டது. ஜனாதிபதியின் வீடு எரியூட்டப்பட்ட சம்பவத்துடன் எனக்கு எந்தவித தொடர்பும் கிடையாது -என்றார். (ம-14,இ)

# சர்வகட்சி இழுத்தடிப்பால் தேசிய அரசாங்கம் உதயம்

## ஜனாதிபதி ஆலோசிப்பு

கொழும்பு, ஓக. 19

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில், தேசிய அரசாங்கத்தின் கீழ் புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடி வருகின்றார். ஆயினும் சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

இந்த நிலையில் தேசிய அரசாங்கத்தின்கீழ் புதிய அமைச்சரவையை நியமிக்க ஜனாதிபதி ஆலோசித்து வருகிறார்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக அமைச்சரவைக்குப் பதிலாக அடுத்த வாரம் சுமார் முப்பது பேர் கொண்ட புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளது.

இந்த அமைச்சரவையின் நியமனத்துக்கு பொதுஜன பெரமுனவும் அமைச்சுப் பதவிகளுக்கான உறுப்பினர்களின் பட்டியலை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

மேலும் புதிய அமைச்சரவையில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலர் உள்வாங்கப்படவுள்ளனர் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஜீவன் தொண்டமான் மற்றும் தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க முடியாத பட்சத்திலேயே தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நீதிப் போராட்டத்தில் அனைவரும் இணையவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக.19**
**தமிழ் தேசியத்தின் வழியில் பயணிக்கும் அனைவரும் தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தில் ஒன்றிணைய வேண்டும் என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்படோரின் உறவுகள் சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.**

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் 51ஆவது ஐ.நா. கூட்டத்தொடருக்கான கடிதம் தயாரிக்கும் கலந்துரையாடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு தங்கள் ஆதரவையும், கருத்துக்களையும் வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியத்தின் வழியில் பயணிக்கும் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்புக் கடிதமொன்றை வெளியிட்டுள்ளனர்.
அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:
ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடர்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் 2018ஆம் ஆண்டு மார்ச் மாதக் கூட்டத் தொடரிலிருந்து எமது சாட்சியங்களை அளித்து வருகின்றோம். கூட்டத் தொடருக்குச் செல்ல முடியாத காலத்தில் இலத்திரனியல் ஊடகம் மூலம் சாட்சியமளித்துள்ளோம்.
2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி தொடங்கிய போராட்டத்தில் எம்முடன் இணைந்திருந்த 138 பெற்றோர்கள் தற்போது உயிருடன் இல்லை. ஆனாலும் 2 ஆயிரம் நாள்களுக்கு மேலாக எம் உயிரினும் மேலான எங்கள் உறவுகளுக்காக நீதிகோரிப் போராடி வருகின்றோம்.
கடந்த வருடமும் மார்ச் மாதக் கூட்டத் தொடருக்காக சகல அரசியல்கட்சிகளினதும், மனித உரிமைகளில் அக்கறை கொண்ட அமைப்புகளினதும் ஒத்துழைப்புடன், ஒருமித்து எம் கோரிக்கைகள் ஜெனிவாவுக்கு மனுவாக அனுப்பப்பட்டது. அதேபோல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் இந்த 51ஆவது கூட்டத் தொடருக்கு முன்பாக நாம் அனைவரும் இணைந்து எமது கோரிக்கைகளை ஒருமித்த குரலில் முன்வைப்பது அவசியமாகிறது.
இதுதொடர்பாகக் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்து அதை செயல்வடிவமாக்குவதற்காக எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் வடக்கு- கிழக்கைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம் -என்றுள்ளது. (எ-7)




## பறந்து வருவாய் மயில்வாகனனே!

நல்லைக் கந்தனே கருணைக்கடலே
வரங்களை அள்ளித்தரும் நல்லையம்பதியனே
ஆறுதல் தரும் அழகிய வேலவனே
துன்பங்களைத் துடைக்க வரும் கலியுக வரதனே
பக்தர்களைக் காக்க வரும் பழனியப்பனே
பாவங்களைப் போக்கவரும் சண்முகவரதனே
கருணைமிகு கந்தனே, உன்னடி தொழுவோம்
நாட்டிலும் வீட்டிலும் மகிழ்ச்சி பொங்க உன்
மயில் மீதேறி பறந்து வருவாய் மயில்வாகனனே!

இ.இராஜேஸ்வரி

# தமிழ்த் தேசத்தை அங்கீகரித்தாலே நெருக்கடிகளில் இருந்து மீளலாம்

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.19
சிறிலங்காவில் போர் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், போர் நடந்த காலத்தில் இருந்த பொருளாதார நிலையை விடவும் தற்போது சிறிலங்காவின் பொருளாதார நிலை மோசடைந்துள்ளது. இந்தக் கடன் பொறிக்குள் இருந்து சிறிலங்கா தன்னைக் காத்துக் கொள்வதற்கு தமிழ்த் தேசத்தை அங்கீரிப்பதே ஒரே தீர்வாக இருக்கும் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இலங்கை அரசாங்கத்துக்கு இப்போது உள்ள வருமானத்தை விடவும், புலம்பெயர் தமிழர்களின் வருமானம் அதிகமாக இருக்கின்றது. உலகில் மிகப்பலமான நாடுகளில் புலம்பெயர் தமிழர்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் அந்த அரசுகளுக்கு சுமையாக இல்லாமல் மிகச்சிறந்த ஒரு சமூகமாக இருக்கின்றனர். அந்த மக்களின் உதவிகளை, முதலீடுகளை பெற்றுக் கொள்ளமுடியும்.
இதுவரை தமிழரை அழிக்க சீனாவின் கால்களில் வீழ்ந்த சிறிலங்கா, தற்போது மேற்கத்தேய மற்றும் இந்தியாவின் கால்களில் வீழ்கின்றது. அதை சீனா பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. தனது கடனில் இருந்து இலங்கையைத் தப்பவிடாது. சீனாவின் கப்பல் வருவதற்கு முதல் நாள் உளவு பார்ப்பதற்கென இந்தியா தன்னுடைய விமானத்தை இலங்கைக்கு வழங்கி இலங்கைத் தீவிலுள்ள பூகோளப் போட்டியை இன்னும் தீவிரமடைய வைத்திருக்கின்றது. இந்த நடவடிக்கைகள் எவையும் தமிழ் மக்களுக்கு நன்மையைக் கொடுக்கக் கூடியவை அல்ல.
தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே பிரிவுகள் ஒன்றும் இல்லாமல் உள்நாட்டிலே நாங்கள் எங்கள் ஒவ்வொருவரையும் மதிக்கக்கூடிய ஒவ்வொரு தேசங்களையும் ஏற்கக்கூடிய சந்தர்ப்பம் உருவாகினால் நாங்கள் இந்தப் பூகோளப்போட்டியில் எங்களுடைய நன்மைக்காகவும் பொது நன்மைக்காகவும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். அதை செய்யத் தவறினால் வெளிச் சக்திகள் தங்களுடைய தேவைகளை அடைவதற்கு எங்களுடைய பிரிவுகளை பயன்படுத்துகின்ற நிலைமையே தொடர்ந்து காணப்படும் - என்றார். (எ-20.125)

# நிலக்கரி மின்னுற்பத்தி இல்லையேல் 10 மணிநேர மின்துண்டிப்புக்கு வாய்ப்பு

## சம்பிக்க ரணவக்க எதிர்வுகூறல்

கொழும்பு. ஒக. 19
அடுத்த மாதம் இறுதியிலிருந்து நிலக்கரி மின் உற்பத்திக்குத் தேவையான இரண்டரை மில்லியன் தொன் நிலக்கரி கொண்டுவர முறையான நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்காலத்தில் 10 மணிநேர மின்துண்டிப்புக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்வரும் 2025ஆம் ஆண்டுவரை நிலக்கரி கொண்டுவர மின்சக்தி அமைச்சால் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.
ஒருசில மாதங்களுக்கேனும் தேவையான நிலக்கரியைக் கொண்டுவர பொலரில்லை எனத் தெரிவிக்கும் நிலையில் ஒரே தடவையில் 2025 ஆம் ஆண்டு வரை எந்த அடிப்படையில், எந்தச் செயற்பாட்டின் ஊடாக நிலக்கரி கொண்டு வரப்போகின்றார்கள் என்பது சந்தேகமே.
முறையான திட்டத்தின் கீழ், நாட்டின் பொருளாதாரம் மற்றும் வெளிநாட்டு செலாவணிக்கு தாங்கிக்கொள்ள முடியுமான வகையில் நிலக்கரி கொண்டுவரும் நடவடிக்கையை மேற்கொள்ள தவறுகின்றமையால் தற்போது பெரும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.
தொடர்ந்தும் இவ்வாறே முறைகேடான வகை யில் முன்னெடுத்தால், எதிர்காலத்தில் மிகவும் பாரதூரமான விடயங்களுக்கு முகம்கொடுக்கவேண்டி ஏற்படும். நிலக்கரி மின் உற்பத்திஇல்லாமல்போனால் மின்சாரசபை தற்போது மேற்கொண்டு வரும் 3 மணி நேர மின்துண்டிப்பு 10 மணி நேரத்துக்கும் அதிகமாகலாம் - என்றார். (ச-இ)

# ரூபவாஹினி தாக்குதல்; மேர்வின் சில்வா கைது!

கொழும்பு, ஒக. 19
முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதையடுத்து அவரை விடுவித்த நீதிமன்றம் எதிர்வரும் 16ஆம் திகதி மீண்டும் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டது. 2007ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன வளாகத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் இடம்பெற்று வரும் விசாரணைகளின் அடிப்படையில் மேர்வின் சில்வா கைது செய்யப்பட்டார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் இடம்பெற்று வரும் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் 34 ஆவது சொற்பொழிவு நிகழ்வு, இன்று மாலை 3.30 மணிக்கு உடுப்பிட்டி சைவத் திருத்தொண்டர் அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூசை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் சைவ வாழ்வு' என்னும் தொனிப்பொருளில் சைவப்புலவர் செ.த. குமரன் சிறப்புச்சொற்பொ ழிவை ஆற்றவுள்ளார்.

(ம-14,159)

# மாந்தை கிழக்கில் திருக்குறள் விழா!





**முல்லைத்தீவு, ஓக. 19**

**மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் திருக்குறள் விழா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**

திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்து இடம்பெற்று ஆரணி நர்த்தனாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. விழாவின் ஒரு பகுதியாக மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

உதவிப்பிரதேச செயலர் ம.ஜெப மயூரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் க.லிங்கேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ந.ரஞ்சனா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(ம-14,19)

**முன்பள்ளி மாணவர்களின் கற்றலை மேம்படுத்த முன்பள்ளி ஆங்கில ஆசிரியர்களின் வான்மையை விருத்தி செய்தல்**

செயலமர்வு : இருநாட்கள் நடைபெறும்
காலம் : செப்டம்பர் 8ஆம் மற்றும் 9ஆம் திகதி (வியாழன் மற்றும் வெள்ளி)
நேரம் : முற்பகல் 9.00 - பி.ப 3.00

பங்குபெற்ற விரும்புபவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
**திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
**021 221 6933**
**077 386 7458**

வளவாளர்கள்- **British Council**

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின்
உரிமையாளரின்
பாசமிகு தாயார்
அமரர்
**வேல்முருகன் நாகேஸ்வரி**

பிறப்பு 20.01.1936 — இறப்பு 18.08.2022

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவுத்துயரத்தில் நிறுவன ஊழியர்கள்**
**Advanced Technology Systems**
(CS 20352) (3/6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை
ஆசிரியர் திருமதி
சாயிதர்ஷினி
இராஜவேல்
அவர்களின் அன்புத்
தந்தை
அமரர்
**கந்தன் நாகராஜா**

அவர்கள் 17.08.2022 அன்று காலமானார். அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தனருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன் புரிக்கழகம்**
**யா/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்**
(CS 20347) (3/6)

*கல்வி அமைச்சர்...*

கிளிநொச்சி பல்கலைக்கழக வீதியிலிருந்து பேரணியாக சென்ற மாணவர்கள், நிகழ்வு நடைபெறும் தொழில்நுட்ப வளாகத்துக்குள் நுழைய முயற்சித்த போது, நுழைவாயிலிருந்த பாதுகாவலர்கள் அதற்கு இடமளிக்கவில்லை. இதனால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. இதனையடுத்து, தொழில்நுட்ப வளாகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய மாணவர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

பீடத்தின் செயற்பாடுகளை முழுமையாகப் பூர்த்தி செய்யாமல் திறந்து வைக்கப்படுவதாகவும், கல்வி செயற்பாடுகளுடன் தொடர்புடைய எவரேனும் கட்டடத்தை திறந்தால் தமக்குப் பிரச்சினை இல்லை எனவும் அரசியல்வாதி ஒருவரை திறக்க வைத்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனவும் மாணவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

தமிழ் அமைச்சர் ஒருவருக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்வதை பெரும்பான்மையின மாணவர்கள் தவிர்த்தமையால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்டவர்கள் நேற்றைய திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொள்ள முடிந்தது.

இந்தச் சம்பவத்தையடுத்து, ஏற்கனவே திட்டமிட்டபடி யாழ். பல்கலைக்கழகத்துக்கு கல்வி அமைச்சர் இன்று வருகை தருவாரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இதேவேளை- இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அறிவியல்நகர் வளாகத்திலிருந்து 2017/18 பிரிவு மாணவர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு முன் வெளியேறுமாறு பல்கலைகழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

**ஒன்றியத்துக்கு தொடர்பில்லை**

இந்தப் போராட்டத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

போராட்டம் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கோ அல்லது கிளிநொச்சி தொழில்நுட்ப பீட மாணவர் ஒன்றியத்துக்கோ தெரியப்படுத்தாத குறித்த போராட்டம் , அரசியல் சுயலாபத்துக்காக இடம் பெற்றதா என்ற சந்தேகம் தமக்கு எழுகிறது என்று மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-20)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24.03.1949

இறப்பு 03.09.2018

எம்மையே நினைத்து எமக்காகவே வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அப்பா!

**அமரர் இளையவி சின்னராசா**
(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர் அனைவரும் போற்ற
வாழ்ந்து காட்டிய அப்பாவே - நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில் சுடர் விட்டுக் கொண்டிருக்கும்
குலவிளக்கே அப்பா!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து நான்காண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் பிரியாது

இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

30, அரசடி வீதி,
5ஆம் ஒழுங்கை, நல்லூர்.

**குடும்பத்தினர்.**

*அமைச்சர்...*

யோக முறைமை குறித்து மேற்படி நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரி இவ்வாறு முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கேந்திரத்தில் ஓர் ஊசலாட்டம்

உயர் தொழில்நுட்பங்களைக் கொண்ட சீனாவின் செய்மதிக் கப்பலான 'யுவான் வாங் – 5' இந்தியாவின் கடும் எதிர்ப்புக்கும் பிராந்தியத்தின் பதற்றத்துக்கும் மத்தியில் அம்பாந்தோட்டைத் துறை முகத்தை வந்தடைந்து இருநாள்களாகிவிட்டன. ராஜபக்சக்களின் முறையற்ற நிதிக் கையாள்கையாலும், வாங்கிக் குவித்த சர்வதேசக் கடன்களாலும் 'ஆலை வாய்க் கரும்புபோல்' நெருக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கை, இனி பிராந்தியப் பதற்றத்திலும் சக்கையாகப் பிழிபடத்தான் போகின்றது என்பதை 'யுவான் வாங்' கப்பலின் வருகை நன்றாகவே கட்டியம் செய்திருக்கின்றது.

'யுவான் வாங்' கப்பலின் வருகை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட நாள்முதலாக, அந்தக் கப்பல் அம்பாந்தோட்டையில் நங்கூரமிடக்கூடாது என்பதில் இந்தியா தீர்க்கம் காட்டியது. இதற்காக இலங்கைக்கு தூதரக ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் பல்வேறு அழுத்தங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்கியது. கடும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் – நாடு திவால் நிலைக்குச் சென்ற பின்னரும் இலங்கை இன்று இறவாதிருக்கின்றது என்றால், அதற்கு இந்தியா மூச்சைக் காப்பாற்ற வழங்கிய ஒட்சிசன் போன்ற கடனுதவிகள்தான் காரணம். இந்த உதவிகளும் இலங்கைக்கு அழுத்தம் வழங்குவதற்கு இந்தியாவுக்கு கச்சிதமான பிடிமானங்களாக இருந்தன – இருக்கின்றன. ஆனால், ஆசியாவில் வல்லாதிக்கப் போக்கை வெளிப்படுத்தும் சீனம், தனக்கே உரித்தான விட்டுக்கொடாப் பாணியில் திட்டமிட்டவாறு 'யுவான் வாங் – 5' கப்பலை இலங்கையில் நங்கூரமிட்டிருக்கின்றது.


இந்தியாவைப் பகைத்துக்கொண்டு இலங்கை யால் பிராந்தியத்தில் தாக்குப்பிடிக்கவோ, எதையும் சாதிக்கவோ முடியாது. சீனாவிடம் மாறிமாறி வாரிக்குவித்த இமாலயக் கடன் உதவிகளே இலங்கையை மூழ்கடிக்கப் போதுமானது. இன்னும் சொல்லப்போனால், அதை சீனாவே கச்சிதமாகச் செய்துமுடிக்கும். ஆக, இந்த நிலையில் இருந்து இலங்கையை மீட்கக் கூடிய ஆபத்பாந்தவன் இந்தியா மட்டும்தான். இதை 'ரணில் அன்ட் கோ' தெட்டத்தெளிவாக அறியும். இப்படியொரு நிலையில்தான் இந்தியாவைச் சமாளிப்பதற்காக, அதானி நிறுவனத்துக்கு மன்னார், பூநகரியில் காற்றாலை மின்னுற்பத்தி செய்வதற்கான திட்டங்களுக்கு 'தற்காலிக' ஒப்புதல் வழங்கியுள்ளது ரணில் அரசாங்கம். இங்கே 'தற்காலிக' என்ற சொல்லாடல்தான் ஆழ்ந்து கவனிக்க வேண்டியது. முழுமையான பரிசீலனைகள், கலந்துரையாடல்கள் இல்லாமல் இந்தியாவைச் சாந்தப்படுத்துவதை ஒரே நோக்கமாகக் கொண்டு ஒரே இரவில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதா? என்ற வினாவை 'தற்காலிக ஒப்புதல்' என்ற ரணில் அரசாங்கத்தின் கூற்று எழுப்புகின்றது.

இதுவரையும் ஏற்பட்ட பூகோளப் பிரச்சினைகளும் பிராந்தியப் பதற்றங்களும் மிகச் சாதாரணமான விடயங்கள்தான். ஆனால் உண்மையான பூகோளப்போட்டி இப்போதுதான் இலங்கையை மையமாக வைத்து ஆரம்பித்திருக்கின்றது. இனி இலங்கையின் எதிர்காலம் இலங்கையின் ஆட்சியாளர்களாலோ, மக்களாலோ தீர்மானிக்கப்படும் ஒன்றாக அமையாது. இரையொன்று மெல்லமெல்ல இறக்கும்போது அதை வேட்டையாடி முடித்துவிடும் கழுதைப்புலிகள் போல இந்தத் தீவை வல்லரசுகள் வேட்டையாடக்கூடும். அதற்குள் தன் இருப்பை தற்சார்புப் பொருளாதாரத்தை முதுகெலும்புத் தனத்தை இலங்கை எண்பித்துவிடவேண்டும்.

கழுதைப்புலிகள் காத்திருந்து வேட்டையாடுவதில்லை என்பதுதான் இங்கு முக்கியம்.

**நாளொரு நல்வார்த்தை**

"ஒரு எதிரியை நண்பனாக மாற்றும் ஒரே சக்தி அன்பு மட்டுமே"
-மார்ட்டின் லூதர் கிங்-




# தமிழ் மக்களின் உரிமைகளுக்காக இலுப்பைக்கடவையில் போராட்டம்!

## நூறு நாள்கள் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக முன்னெடுப்பு

**மன்னார், ஓக. 19**

**தமிழ் மக்களின் உரிமைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்டுவரும் நூறு நாள் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக மன்னார் இலுப்பைக்கடவையில் நேற்றுமுன்தினம் போராட்டம் இடம்பெற்றது.**

வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் இணைந்து இந்த நூறு நாள் செயற்றிட்டத்தை கடந்த முதலாம் திகதி ஆரம்பித்தனர். இந்த நீண்ட செயற்றிட்டம் தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாகவே இலுப்பைக் கடவையில் நேற்றுமுன்தினம் போராட்டம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வைப் பெறுவதற்கான தெளிவுபடுத்தல்கள் இடம்



பெற்றதுடன் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டன. (ம-60)

# மத்திய வங்கி ஆளுநர் பெயரில் ஊடகங்களில் போலிச் செய்தி!

கொழும்பு, ஓக. 19

மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க 'பணவீக்கம் என்பது பிரச்சினை அல்ல : ஆனால் அது தீர்வொன்றாகும்' என்று தெரிவித்துள்ளார் என சில இணைய ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தெளிவுபடுத்தி மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'பணவீக்கம் என்பது பிரச்சினை அல்ல, ஆனால் தீர்வொன்றாகும். இந்தப் பொருளாதார நெருக்கடி எங்களுக்கேற்பட்ட சிறந்த விடயமொன்றாக இருக்கலாம் மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகின்றார்' என்ற தலைப்பின் கீழ் அல்லது இதேபோன்ற தலைப்புகளின் கீழ் அண்மையில் சமூக வலைத்தளங்களில் பரந்தளவில் செய்திகள் வெளியிடப்படுகின்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் பெயரில் வேறு தனிப்பட்ட நபர்களால் எழுதப்பட்ட இந்தத் தலைப்பிலான செய்திகளுக்கு அவரோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பல்ல என்பது பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது - என்றுள்ளது. (எ-இ)

**நாளை**

**20.08.2022**
**சனிக்கிழமை**
**ஆவணி 04**

சுபநேரம் : 03.05 - 04.35
ராகுகாலம்: 09.05 - 10.35

**ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓட்டோ கட்டணமாக

# முதல் கி.மீற்றருக்கு 200 ரூபா அறவிடல்!

## தெல்லிப்பழை சாரதிகள் ஏகமனது



**யாழ்ப்பாணம், ஓக. 19**

**ஓட்டோக் கட்டணமாக முதல் கிலோமீற்றருக்கு 200 ரூபாவையும் அதன் பின்பான ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் தலா 150 ரூபாவையும் அறவிடுவது என்று தெல்லிப்பழை ஓட்டோ சாரதிகள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.**

தெல்லிப்பழை ஓட்டோ சாரதிகளுக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. ஓட்டோ சாரதிகளுக்கு போதியளவு எரிபொருள் கிடைப்பதை உறுதிப்படுத்தல், சேவைக் கட்டணம் என்பன தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

ஓட்டோ சாரதிகளால் அதிகரித்த கட்டணம் அறவிடப்படுகின்றது என்று கிடைக்கும் முறைப்பாடுகளை பிரதேச செயலர் சுட்டிக்காட்டியதுடன், இது தொடர்பில் ஓட்டோ சாரதிகள் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இதையடுத்தே, மக்களின் வாழ்க்கைச் சுமையைக் கருத்திற் கொண்டு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் சேவையில் ஈடுபடும் தாம், முதல் கிலோமீற்றருக்கு சேவைக் கட்டணமாக 200 ரூபாவையும் அதன் பின்னரான ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் தலா 150 ரூபாவையும் அறவிடுவது என்று ஓட்டோ சாரதிகள் தீர்மானித்தனர். இதற்கு பிரதேச செயலர் வரவேற்புத் தெரிவித்ததுடன், ஓட்டோக்களுக்கு கூடுதல் எரிபொருள் கியூ.ஆர். முறையில் ஒதுக்கப்பட வாய்ப்புள்ளது என்றும் அதற்கு மேலதிகமாகவும் எரிபொருள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ம)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 19

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவியும், நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவியுமான எறின் கிளன்சியா கிளன்சியஸ் லொயலாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக லண்டன், சலங்கை நர்த்தனாலயா நுண்கலைக் கல்லூரியின் இயக்குநர் கலாநிதி ஜெயந்தி யோகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை நடனத்துறை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன், யாழ். கல்வி வலய நடனபாட ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி துஷ்யந்தி துஷிதரன், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை பிரதி அதிபர் திருமதி அக்னஸ் செல்வராணி சத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அணிசெய் கலைஞர்களாக ஸ்ரீமதி சுதர்சினி கரன்சன் நட்டுவாங்கம், நடன அமைப்பையும், யாழ். பல்கலைக்கழக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தின் இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் இசைமாணி தவநாதன் றொபேட் குரலிசையையும், மிருதங்க ஞானவாரிதி சி.துரைராஜா மிருதங்க இசையையும், சுருதி வேந்தன் அ.ஜெயராமன் வயலின் இசையையும் வழங்கி அரங்கேற்றத்துக்கு அணி செய்யவுள்ளனர். (எ-இ)

## அதிபர்கள் நியமனம்

சாவகச்சேரி, டிசெ.19

தென்மராட்சி கல்வி வலயத்தில் இரு பாடசாலைகளுக்குப் புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்துக்கு மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை அதிபராக கடமையாற்றிய க.சத்தியானந்தனும், கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலைக்கு கைதடி சேதுகாவலர் வித்தியாலய அதிபராக கடமையாற்றிய திருமதி சி. கணராஜாவும் நியமிக்கப்பட்டுக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

அதேவேளை, இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த அதிபர்களான மந்துவில் சிறிபாரதி வித்தியாலத்தில் அதிபராக கடமையாற்றிய திருமதி ஆனந்தி சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கும், கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய ஆ. தங்கவேலு வரணி மத்திய கல்லூரிக்கும் நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-9)



## யாழ். இந்துக்கல்லூரியில் ஹிந்தி வகுப்பு ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் ஹிந்தி வகுப்பு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் முதன்முறையாக தொடங்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (ம)

## மண்டபம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக. 19

கொடிகாமம் பாலாவி கிராம அலுவலர் பிரிவிலுள்ள பாலாவித்தாழ்வு இந்து மயானத்தில் இளைப்பாறும் மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அமரர் திருமதி மங்கையற்கரசி சுப்பிரமணியத்தின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட இந்த மண்டபத்தை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் திறந்து வைக்கவுள்ளார். (ச-159)

## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஓக. 19

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல இடங்களில் மாலை அல்லது இரவில் இடியுடன் கூடிய மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் இது தொடர்பில் வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்ச ரிக்கை அவசியம். அத்துடன் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடும். மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புக்குள் அவ்வப்போது [illegible] படும் - என்றுள்ளது. (ச-இ)

## சிறுமியை ஆற்றில் வீசியவர் கைதானார்

கொழும்பு, ஓக. 19

குருநாகல் பொல்காவெல உடபொல பிரதேசத்தில் உள்ள ஆற்றில் சிறுமியை தூக்கி வீசிய உடபொல கிராம அலுவலர் கைது செய்யப்பட்டார்.

குறித்த பகுதியுள்ள ஆற்றில் யானை ஒன்று குளிப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த 8 வயது சிறுமியை அதே ஆற்றில் குறித்த கிராம அலுவலர் தூக்கி வீசியுள்ளார். சிறுமி எலும்பு முறிந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிறுமியின் பெற்றோர் பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட உடபொல கிராம அலுவலர் குடிபோதையில் இருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14,இ)

## பாம்பு தீண்டியதில் குடும்பப் பெண் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஓக. 19

புற்றுக்குள் மறைந்திருந்த பாம்பு தீண்டியதில் குடும்பப் பெண் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொடிகாமம் கெற்பேலி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

28 வயதுடைய குடும்பப் பெண்ணே இவ்வாறு பாம்பு தீண்டலுக்கு உள்ளாகி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-9)

## தென்மராட்சியில் முதியோர் கொடுப்பனவு

சாவகச்சேரி, ஓக. 19

தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கான ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவு பிரதேச சமூக சேவைகள் அலகால் நேற்று அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் பிள்ளையை தத்தெடுக்க விரும்புகின்றோம்

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த யாழில் வசிக்கும் வசதியான குடும்பம் ஒன்று யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெண் பிள்ளை ஒன்றினை தத்தெடுத்து வளர்க்க விரும்புகின்றார்கள். தத்துக்கொடுக்க விரும்புவோர் பிள்ளை மற்றும் பெற்றோரின் முழு விபரத்தையும் பின்வரும் மின் அஞ்சலுக்கு அல்லது Whatsapp இலக்கத்துக்கு அனுப்பிவைக்கவும்.

Whatsapp: + 94 767 435 429
Email: sr2arthar@gmail.com


## ஆதனபெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வலிகாமம் தெற்குபிரதேச சபை உப அலுவலகம், உடுவில்.
### வட்டாரம்-10 தாவடி மானிப்பாய் வீதி, ஆதன இல-22

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-10 தாவடி மானிப் பாய் வீதியில் அமைந்துள்ள 22ம் இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் இ.அரசரட்ணம் எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு நாகேஸ்வரன் கோவர்த்தனன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்குப்பகுதி நல்லூர் கோவிற்பற்று தாவடி கிழக்கு இறையில் அமைந்துள்ள "தோப்பு வளவு" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு. 2 குளி 7.25 உம் மற்றும் அதனுள் உள்ளவையுமான குறித்த ஆதன மானது இளங்கோ இராஜரட்ணம் (ஐக்கிய இராச்சிய கடவுச்சீட்டு இலக்கம் 520523995) என்பவரால் அவரின் அற்றோணித்தத்துவக்காரரான திருமதி தங்கம்மா இராகுலன் ( இலங்கை தேசிய அடையாள அட்டை இலக்கம் 19626010088) மூலம் பிரகடனப்படுத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளார்.

இவ்வாதனமானது 1974ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ம் திகதி பிரசித்த நொத்தாரிசு கே.துரைசிங்கம் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 24932ம் இலக்க சீதன உறுதியின் பிரகாரம் குறித்த "தோப்பு வளவு" என்னும் ஆதனமும் அதற்குச் சேர்ந்தவைகளும் அரசரத்தினம் இராசரத்தினம் கைம்பெண் ரஞ்சினி என்பவருக்கு சொந்தமானதும் ஆட்சியானதுமாகும் என்றும் குறித்த அரசரத்தினம் இராசரத்தினம் கைம்பெண் ரஞ்சினி என்பவர் மேற்குறிப்பிட்ட நிர்வாகச்சொத்தினை அவரது ஒரே மகனான குறித்த இளங்கோ இராஜரட்ணத்தை வாரிசாக விட்டு சொத்துறுதியற்று இறந்துள்ளார். ஆகவே தேசவழமை சட்டத்தின்படி குறித்த ஆதனமானது தனது தாய் வழி வந்ததும் தனக்கு உரித்தானதுமான முதுசொம் சொத்தாகும் என்பதுடன் குறித்த ஆதனம் முழுவதும் தனது ஆட்சியில் உள்ளதாகும் என்றும் தற்போது இவ்வா தனத்திற்கு தானே சொந்தமும் நிந்தமுமாவேன் என 184ம் இலக்கத்தில் நாகேஸ்வரன் கோவர்த்தனன் முகதாவில் 24.03.2022ம் திகதி குறித்த இளங்கோ இராஜரட்ணத்தினால் பிரகடனப்படுத்தல் உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் உத்தரவுபெற்ற உலாந்தா ந.கேதீஸ்வரன் அவர்களால் 2022.04.20 இல் அளந்து தயாரிக்கப் பட்ட 5365ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 2குளி 1.52உம் அதற்குரியவைகளும் இதற்தெற்கெல்லைகளாக

கிழக்கு :- ஒழுங்கையும்
வடக்கு :- பொன்னம்பலம் முத்துத்தம்பி இராசரத்தினம் பெண் மகேஸ்வரியின் ஆதனமும்
மேற்கு :- சுப்பையா இராமலிங்கம் சரவணபவன் பெண் மதிவதனியின் ஆதனமும்
தெற்கு :- றோட்டு. இதனடங்கலும் வடமேற்கில் உள்ள கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் எனவே மேற்குறித்த ஆதனத்தினை இளங்கோ இராஜரட்ணம் தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது இளங்கோ இராஜரட்ணம் எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.தர்ஷன்.**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்குபிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(cs.20359) (2.6)


## வேலையாட்கள் தேவை

சலூன் வேலைகளில் நன்கு அனுபவமுள்ள பொறுப்பாக இருந்து நடத்தக்கூடிய ஒருவர் உடன் தேவை.

077 906 3583, 075 770 4061


## காணி விற்பனைக்கு

யாழ். கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் திருவள்ளுவர் வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு விலை 6 கோடி ரூபா

(CR 37076) (3/6)

077 723 2535


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி இஜீனா
கொன்சலா றூபேந்திரன்
அவர்களின் பாசமிகு தந்தை

### பிறான்சீஸ் சேவியர் அருமைநாயகம்

அவர்கள் கடந்த 17.08.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க. வித்தியாலயம்.**

(CS20353) (3/6)

## மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
## Procurement of Sports Shield & Medal - 2022
### NP / 20 / PFM / PROC / SH&ME / 2022 / 05

1. மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 2022ம் ஆண்டுக்கான கீழ்வரும் விபரப்படியான பெறுகையினைமேற்கொள்வதற்குத் திணைக்களப் பெறுகைக்குழு (பெரியது) முத்திரை யிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றது.

| Procurement No. | Item | No. of Category Items | Estimated Cost in Mn. Rs. | Bid Security Rs. | Non-Refundable fee Rs. |
|---|---|---|---|---|---|
| NP/20/PFM/PROC/SH&ME/2022/05 | Shields -Wood & Plate | 341 | 3.00 | 30,000 | 1,000 |
| | Medals | 776 | | | |

2. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேள்வி அடிப்படையில் நடை முறைப்படுத்தப்படும்.
3. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி II இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
4. வழங்குனர்கள் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தில் கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1,000/= இலங்கை வங்கியின் "0005932043" இலக்கத்திற்கு வைப்புச்செய்து பற்றுச்சீட்டினை அலுவலகத்தில் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 19..08.2022 தொடக்கம் 01.09.2022 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
5. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 29.08.2022 காலை 10.00 மணிக்கு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
6. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் பிரதம கணக்காளர் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக் கேள்விகள் 02 .09.2022ம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குத் திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரமுள்ளது.

**செ. உதயகுமார்**
**தலைவர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர், திணைக்கள பெறுகைககள் குழு (பெரியது), மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர்.**


நல்லூர் அலங்காரக் கந்தன் உற்சவ காலத்தில்
புத்தாடை புது வரவுகளை
# 10 - 50% வரை
விலைக் கழிவுகளுடன்
அள்ளிச் செல்ல இன்றே விரையுங்கள்.



LINGAA Fashion
லிங்கா பெஷன்

நல்லூரில் ஆடைகளின் சாம்ராஜ்யம்



## லிங்கா பெஷன்

Whatsapp - 076 644 0722
Tel: 021 221 4999
www.lingaa.lk
www.fb.com / lingaa.lk
No. 302A, TEMPLE ROAD, NALLUR, JAFFNA.

(CR 37056) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 - 02 - 1955

மறைவு 20 - 07 - 2022



கடந்த 20.07.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் பொன்னுத்துரை தேவபாதம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
மருத்துவ பீடம் - யாழ். பல்கலைக்கழகம்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இன்று வரை எமக்கு பல வழிகளிலும் உதவி புரிகின்ற நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மணல் வீதி,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி

குடும்பத்தினர்

(CS 20355 ) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 03 . 1947

மறைவு 15 . 08 . 2022



## திருமதி துரைராஜா கௌரீஸ்வரி (யோகம் அக்கா)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராஜா கௌரீஸ்வரி (யோகம் அக்கா) 15.08.2022 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசரத்தினம் பாக்கியம் அவர்களின் பாசமிகு மகளும் உடுவில் கிழக்கு கற்பக பிள்ளையார் கோயிலடியை சேர்ந்த காலஞ்சென்ற வைரமுத்து துரைராஜாவின் அன்பு மனைவியும், வைரமுத்து சுப்பிரமணியம், வைரமுத்து சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனியும் அமரர் தவராசா (அப்புத்துரை), சிவகுருநாதன் (ராசன்) அவர்களின் சகோதரியும் உருத்திராதேவி, கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் கமலாதேவி, விமலாதேவி, விமலநாதன், நகுலநாதன், கவிதா, காஞ்சனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணபதிப்பிள்ளை, குலநாதன், மஞ்சுலா, காஞ்சனா (சுமதி) சிவகுமார், பாஸ்கரன், தசிகா, யாழினி, வாணி, சுதன், குஞ்சன், நிசா ஆகியோரது மாமியும் சுரேன், தட்சாயினி, பிரசன்னா, பிரசாந், அபிராமி, விஸ்வா, மகிசா, தனுஷ், அனுஸ்கா, சாருகா, சோபிகா, அனிக்கா, சிவநயனி, அக்ஷ்யன், மிதுசன், மிதுசனா ஆகியோரின் பேர்த்தியும் பிரணனி, கெயர்சி, சாகர், ஆதித்தன், சிர்த்தாத், வித்தியசிறி, ஜனபவன், ரிதிசிகா, றிஸ்னிகா ஆகியோரின் பூட்டியும் மோகனலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

மண்ணில் 19 - 09 - 1949

விண்ணில் 17 - 08 - 2022



## பிரான்சிஸ் சேவியர் அருமைநாயகம்

(இளைப்பாறிய பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் இல.82 கண்டி வீதி யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் சேவியர் அருமைநாயகம் அவர்கள் கடந்த (17.08.2022) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ், மேரிக்கிளாறா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, லில்லி எலிசபேத் ஆகியோரின் மருமகனும், மேரிபேடர்னேற் (கீதா) இன் பாசமிகு கணவரும், சறோஜ் அன்சிலா (HNB), யசோன் இன்பராஜ் (பிரான்ஸ்), இஜீனா கொன்சலா (ஆசிரியர், சென்.பெனடிற் றோ.க. வித் தியாலயம்), ஸ்ரீபன் இதயராஜ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் VSTPS) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராமன் (HNB), மரீனா அர்ஜிகா (பிரான்ஸ்), றூபேந்திரன் (NDB) ஆகியோரின் மாமனாரும், லிவினேஸ், வேணிஷா, சிசிலியா, சிந்தியா, பானுஜன், தீபிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்வநாயகம், சுகிர்தசீலி, புனிதசீலி, போசியா மரிய நாயகம், தரளசீலி, ராசநாயகம் (சுவிஸ்), ஜீவநாயகம் ஆகியோரின் சகோதரரும், காலஞ் சென்ற பேணாட், அருட்சகோதரி ஆன்மேரி (A.C), மாலா (ஜேர்மனி), அனிதா (ஜேர்மனி), ஹென்றி றெஜினோல்ட் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி யளவில் அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு சில்லாலை தூய கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தூய கதிரை அன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(CS 20351) (3/6)

தகவல் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 06 . 1993

இறப்பு 17 . 08 . 2022



## புண்ணியமூர்த்தி கோகுலன்

யாழ்.நெடுந்தீவு மேற்கை பூர்வீகமாகவும் இலக்கம்.937 விநாயகபுரம் துணுக்காயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி கோகுலன் 17.08.2022 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் புண்ணியமூர்த்தி அன்பரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தயானந்தன் மற்றும் கஜந்தன் (அதிபர் மு/மூன்று முறிப்பு அ.த.க பாடசாலை), சகிதா (ஆசிரியர் - மு/பண்டியன்குளம் ம.வி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குயின்சிகா (ஆசிரியர் - மு/விநாயகபுரம் அ.த.க பாடசாலை), டிசந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ,அக்சிகாவின் குட்டி மாமாவும், அமரர்களான அம்பலவாணர், கற்பகம், சுப்பிரமணியம் மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தனிநாயகம் குமாரவேலு, மருதலிங்கம், மற்றும் தருமரத்தினம், மயில்வாகனம், வரதராசா, அமிர்தலிங்கம், பேரம்பலம், மங்கையற்கரசி ஆகியோரின் பெறாமகனும், ஜெயலட்சுமி, சத்தியசீலன், ஞானசீலன், கேதீஸ்வரன், காலஞ்சென்ற வைத்தீஸ்வரன் மற்றும் புவிநாயகன் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

937/விநாயகபுரம்,
துணுக்காய்.

077 664 7253

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 30.09.1936 | இறப்பு 17.08.2022

## திரு. நமசிவாயம் கதிர்காமநாதன்

(ஓய்வுபெற்ற இலிகிதர் (Clerk))

யாழ். அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பில் வசித்தவரும் தற்போது யாழ். கைதடி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் கதிர்காமநாதன் அவர்கள் கடந்த (17.08.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - பவளம்மா தம்பதியினரின் கனிஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும், சத்தியேஸ்வரி அவர்களின் ஆருயிர் கணவரும், சிவநாதன் (சிங்கப்பூர்), காயத்திரி (நோர்வே), கௌரி (பிரான்ஸ்), நாராயணி (கனடா), கஜமுகன் (கனடா), கார்த்தியாயினி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் , ஏஏதந்த், வாமதேவன், கிருபராஜ், பிரகலாதன், சியாமளா, சகாயப்பிரகாஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜந்தினி, கந்தராஜா, விலாசினி, அபினாஷ், அனுஷ்கா, ஷகானா, வைஷ்ணவி, கஜானன், அஷ்லி, சஞ்சனா, நயோமி, சமிக்ஷா ஆகியோரின் அன்புக்குரிய பேரனும், காலஞ்சென்ற புவனேந்திரன் அவர்களின் அன்புச் சகோதரனும், மகேஷ்வரி, ஆனந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 246, கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர
077303 9531

(CS 20358) (3/6)

# தமிழர்களின் வாழ்வாதாரம் அழிப்பு: மட்டக்களப்பில் மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு, ஓக. 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான பல லட்சம் கால்நடைகளின் மேய்ச்சல் தரவையான மயிலத்தமடு பகுதி சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டு தமிழர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதைக் கண்டித்து, மட்டக்களப்பு செங்கலடி சந்தியில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.



தமிழர்களின் வாழ்வாதாரத்தை திட்டமிட்டு அழிக்கும் நோக்கில் இத்தகைய அத்து மீறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கம் இந்தப் பாரபட்சப் போக்கைக் கைவிட்டு மேய்ச்சல் தரவையை தமிழர்களின் வாழ்வாதாரம் கருதி விடுவிக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஸ் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் செயலில் வெற்றி அடைவீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். திட்டமிட்டிருந்த வேலை மனம் மகிழக் கூடிய அளவில் முடிவுக்கு வரும். சமுதாயத்தில் உங்களுடைய செல்வாக்கு உயரும்.

**இடபம்:** தவறான நபர்களின் நட்பினால் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரும். செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்து பேச்சு எழும்.

**மிதுனம்:** குடும்பத்தில் உண்டான நெருக்கடி விலகும். நண்பர்களின் உதவியால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். புதிய முதலீடு ஆதாயத்தை ஏற்படுத்தும்.

**கடகம்:** தொழிலை விருத்தி செய்யும் முயற்சி வெற்றியாகும். முயற்சி ஒன்றில் முன்னேற்றம் காண்பீர்கள். இழுபறியாக இருந்தவற்றில் மாற்றம் உண்டாகும். வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும்.

**சிம்மம்:** முக்கியமான செயல் முடிவுக்கு வராமல் தடுமாறுவீர்கள். வேலையில் தயக்கம் ஏற்படும். பிரச்சினை ஒன்று உங்களை சங்கடப்படுத்தும். எதிரிகளால் சங்கடங்களுக்கு ஆளாவீர்கள்.

**கன்னி:** மனதில் பதற்றம் அதிகரிக்கும். உறவு வழியில் சங்கடத்தை சந்திப்பீர்கள். அலைச்சல் அதிகரித்தாலும் உடல் சோர்வடையும். [illegible] ஏற்படும்.

**துலாம்:** நண்பர்களின் ஆதரவால் எண்ணம் நிறைவேறும். நினைத்ததை நினைத்தபடி சாதிப்பீர்கள். உங்களுடைய அறிவாற்றல் இன்று வெளிப்படும். தடைபட்டிருந்த முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:** உங்களுக்கு உற்சாகம் ஏற்படும். விலகிச்சென்ற உறவினர் உங்களைத் தேடி வருவர். மறைமுக எதிர்ப்புகள் சரியாகும். முக்கியமான வேலையாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.

**தனுசு:** நீங்கள் எதிர்பார்த்த நன்மையை உங்களால் காண முடியாமல் போகும். யோசித்து செயற்படவேண்டிய நாள். உங்கள் உறவினர் ஒருவ[illegible] பிரச்சினை ஏற்பட்டு அதன் வழியே சங்கடம் அடைவீர்கள்.

**மகரம்:** தங்களுடைய பணியில் கவனமுடன் செயற்படுவீர்கள். நேர்மையால் நன்மை உண்டாகும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். அதில் குழப்பம் உண்டாகும்.


**கும்பம்:** நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்பத்தினர் உதவியுடன் வெற்றி பெறுவீர்கள். உங்களுடைய செல்வாக்கு உயரும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி வெற்றியாகும்.

**மீனம்:** வேலை விடயமாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். அதனால் ஆதாயம் உண்டாகும். உற்சாகத்துடன் செயல் ஒன்றை நிறைவேற்றுவீர்கள். தொல்லை கொடுத்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 - 02 - 1944



மறைவு 12 - 08 - 2022

## நடராஜா கோபாலநாதன்

(ஓய்வுபெற்ற இலங்கை வெளிநாட்டு தொலைத் தொடர்பு அதிகாரி)
( OTS/SLT )

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கோபாலநாதன் அவர்கள் கடந்த (12.08.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் சிவபாக்கியம் (செல்லமணி) தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வனிதாமணியின் அன்புக் கணவரும், கிரிஷ்ணரூபன் (லண்டன்), சிவப்பிரியா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவர்ணா (லண்டன்) ஜெயகணேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிணி (லண்டன்), ஓடன் (அஜெய்-கனடா), லக்ஷானா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெகநாதன் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி (வண்ணார் பண்ணை), தியாகநாதன் (கன்னாதிட்டி) கனகீஸ்வரி (வண்ணார்பண்ணை) மற்றும் நாகேஸ்வரி (கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

41A, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:- பிள்ளைகள்
077 031 8660

(CS 20369) 1-6

# ஐ.நா. அதிகாரியைசந்தித்தார் சஜித்!

ஐ.நா. அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப் பாளர் டேவிட் மெக்லாக்லான்கார் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற் கொண்டுள்ள நிலையில், அவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கை எதிர்கொள்ளும் சில பிரச்சினைகள் தொடர்பில் இரு தரப்பினரும் கவனம் செலுத்தினர். ஐக்கிய நாடுகள் சபையுடன் முறையான மற்றும் நேர்மறையான ஈடுபாட்டின் முக்கியத்துவம் குறித்தும் கவனத்தில் கொள்ளப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் திருமதி ஹனா சிங்கரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார். (எ-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 10.12.1926 மறைவு 16.08.2022

## நடராசா சிவக்கொழுந்து

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவக்கொழுந்து கடந்த (16.08.2022) அன்று தனது 96 ஆவது வயதில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும், முத்துவேலு-தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், சண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கோபாலகிருஸ்ணன், சகுந்தலா மற்றும் சற்குண ராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதி, கனகேஸ்வரி (லண்டன்), மகேந்திரம் (லண டன்), திலகவதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரமேஸ் காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் துளசிகா, டினேஸ் (பிரான்ஸ்), நிசாந்தினி, பிரியதர்சினி, பிரவீனா (லண்டன்), கிருத்திகா (லண்டன்), ரக்ஷனா (லண்டன்), சாங்கித் (லண்டன்), லக்சன் (லண்டன்), ஜோதிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு Divinity Funerel Care 209 Kenlon Road, Harrow middlesex HA3 0HD நாளை (20.08.2022) சனிக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மறுநாள் (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை Golders Green Crematorium Hoop Lane London NW11 7NL இல் தகனம் செய்ய எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

பேரன் ரமேஸ்
0094772151415

மகன்-சற்குணராசா
(UK, 0044 755540860)

(CR 86701) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 - 02 - 1939



மறைவு 17 - 08 - 2022

## திரு.இரத்தினம் கோபாலகிருஸ்ணன் [ஆசன்]

யாழ். கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், சாவகச்சேரி, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் கோபாலகிருஸ்ணன் அவர்கள் 17.08.2022 புதன்கிழமை அன்று அவுஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இரத்தினம், அழகம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற சுப்ரமணியம், அன்னலச்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சிவனேஸ்வரி (வனிதா) அவர்களின் அன்புக் கணவரும்,வனுஷ்யா (லண்டன்), சிந்துஜா (லண்டன்), துஸ்ஜா (கட்டார்), பிரியா (அவுஸ்திரேலியா), கோபிராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,உதயராஜ், அகிலேஸ்வரன், திருஞானசம்பந்தர், முகுந்தன், நிறஞ்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், சரன்ராஜ், பிரிவின்ராஜ், மாதேஷ், விபித்திரா, ஜீவித்தா, நிதுக்சன், அனிஷ், கிரிஷ், கசிக்கா, அக்சிகா, டக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும்,காலஞ்சென்ற பூபதி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராசா, சிவராணி, சிவமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பார்வைக்கு : Saturday, 20 Aug 2022 4:00 PM - 6:00 PM
Liberty Funerals Granville 101 South St, Granville NSW 2142, Australia

கிரியை : Sunday, 21 Aug 2022 10:00 AM - 1:00 PM
Magnolia Chapel Corner and Roads, Delhi Rd & Plassey Rd, North Ryde NSW 2113, Australia

சிவனேஸ்வரி(வனிதா) - மனைவி - +61410771055
பிரிவின்ராஜ் - பேரன் - +447917370023
அகிலேஸ்வரன் - மருமகன் - +447944911230
திருஞானசம்பந்தர் - மருமகன் - +97455547952
முகுந்தன் - மருமகன் - +61402069165
கோபிராஜ் - மகன் - +447465987533

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 07 - 1947



மறைவு 18 - 08 - 2022

## திருமதி இலங்கநாதன் செல்வராணி

மயிலிட்டியைப் பிறப்பிடமாக்வும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரங்கநாதன் செல்வராணி அவர்கள் நேற்று (18.08.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி தங்கம் அவர்களின் புதல்வியும், காலஞ்சென்ற செல்லையா இலங்கநாதனின் அன்பு மனைவியும், தாட்சாயினி, தாரணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரசுராமன் அவர்களின் மாமியாரும், கமலாதேவி, அன்னலட்சுமி, திலகவதி, கணபதிப்பிள்ளை ஆறுமுகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கனகநாயகம், கந்தசாமி, அருமைநாயகம், யோகாம்பிகை, பாலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று புதவுடல் காக்கைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P: 077 36 28 024
076 9816 450

தகவல்:
மருமகன், மகள்.

(CS 20373) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் நகர் பீடத்தில் புதிய கட்டடம் திறப்பு



கிளிநொச்சி, ஓக. 19

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் நேற்று மு.ப. 10 மணியளவில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 525 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், மூத்த பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் இணைந்து நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலர் எம்.என். ரணசிங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலர் கலாநிதி பிரியந்த பிறேமகுமார, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்காளர் ஆர்.ஏ.யூ.ரணவீர, கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர். (அ-ஒ-214)

# மன்னார் நீதிமன்றத்தில் கஞ்சா, கசிப்பு திருட்டு

## காவலாளி, பொலிஸ் கைது!

மன்னார், ஓக. 19

மன்னார் நீதிமன்றத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சான்றுப் பொருள்கள் சிலவற்றை திருடிய நிலையில் மன்னார் நீதிமன்றத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் காவலாளி ஆகிய இருவரையும் நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மன்னார் நீதிவான் நீதிமன்றில் சான்றுப் பொருள்களாக காணப்பட்ட ஒரு தொகுதி பொருள்களை கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் காவலாளி ஆகிய இருவரும் திருடி உள்ளனரென மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுக் காலை காவலாளி தங்குமிடப் பகுதியை பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். இதன் போது திருடப்பட்ட சான்றுப் பொருள்களான ஒரு தொகுதி கேரளக் கஞ்சாப் பொதி, முந்திரிகை விதைகள், மீன்பிடி வலைகள் மற்றும் கசிப்பு ஆகியவற்றை மீட்டுள்ளனர். இதன்போது குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட மன்னார் நீதிமன்றத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் காவலாளி ஆகிய இருவரையும் மன்னார் பொலிஸார் கைது செய்தனர். (அ-ஒ-56)

# மயங்கி வீழ்ந்து மீனவர் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 19

மண்டைதீவு 5ஆம் வட்டாரத்திலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற முதியவர் மயங்கி வீழ்ந்து நேற்று உயிரிழந்துள்ளார்.

ஏழு பிள்ளைகளின் தந்தையான செபமாலை ஜோன் பிள்ளை (வயது - 78) என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஏற்கனவே இவருக்கு தலையில் குருதிக் கசிவு ஏற்படுவதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர். அவரை தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என்று பிள்ளைகள் வற்புறுத்தி வந்த நிலையிலும் அவர் கடலுக்கு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையிலேயே அவர் மயங்கி கடலில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-23-26)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் பாடசாலை அதிபரும் சங்கத் தலைவருமான மு.செல்வநாதன் தலைமையில் பாடசாலையின் கந்தையா உபாத்தியார் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-125)

## மனித உரிமை...

அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு இடம்பெறவுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் கடிதம் அனுப்பியுள்ளன. இலங்கைக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அத்துடன், 6 புலம்பெயர் அமைப்புகள் மற்றும் 316 தனிநபர்கள் மீதான தடை நீக்கத்துக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டுக்கும் இடையில் எவ்வித சம்பந்தமும் இல்லை. இந்த அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் தீவிரமான ஆராய்வின் பின்னரே தடை நீக்கப்பட்டது - என்றும் ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டார். (அ-ஒ-5-22)

## கோத்தா...

உறுதி என்று வெளிவிவகார அமைச்சரும், கோத்தாபயவின் சட்டத்தரணியுமான அலி சப்ரி சர்வதேச ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

'கோத்தாபய நாடு திரும்புவதில் இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எந்த ஏற்பாடுகளையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர் இராஜதந்திர மார்க்கமாக நாடு திரும்புவார். அவர் இலங்கையின் குடிமகன். அவர் விரும்பியவாறு பயணம் செய்யலாம்' என்று அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை- கோத்தாபயவின் உறவினரான உதயங்க நேற்றுமுன்தினம் இதே தகவலை வெளியிட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும் என பெரமுனவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## கொழும்பில்...

பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் கண்ணீர்ப்புகைக்குண்டு தாக்குதலும் நடத்தப்பட்டது. மாணவர் சிதறி ஓடும்போது அவர்கள் மீது தடியடிப் பிரயோகமும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'கைதுசெய்யப்பட்ட போராட்டக்காரர்களை விடுதலை செய்', 'இனியும் கடன் வாங்காதே', 'கொள்ளையடித்த பணத்தை திருப்பித்தா', 'பொருள்களின் விலையைக் குறை' ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, 'டீல் ரணில் ராஜபக்ச இராணுவத்தை விரட்டியடிப்போம்' என்ற தொனிப்பொருளில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று மாலை கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்துக்கு அருகில் பேரணி ஆரம்பமானது.

ஹைலெவல் வீதியூடாக கொழும்பு கோட்டை பகுதிக்குச் செல்வதற்கு மாணவர்கள் முயற்சித்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக பொலிஸார் மாற்று வீதியைப் பயன்படுத்துமாறு வாகனச் சாரதிகளுக்கு அறிவுறுத்தினர். அத்துடன், கலைந்து செல்லுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும், மாணவர்கள் தொடர்ந்தும் எதிர்ப்பில் ஈடுபட்டதால் அவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். அதனையடுத்து கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இதேவேளை - போராட்டத்தை முடித்து திரும்பிக் கொண்டிருந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு ஐந்து லாம்பு சந்தியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், மூத்த பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார். அவருடன் மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-இ)

## முறைகேடுகளை...

விசாரணை நடத்த குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் வடக்கு ஆளுநர் தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளராக இருந்த சிவகுமாரை, ஆளுநர் கட்டாய இடமாற்றம் வழங்கியிருந்த நிலையில் அது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது. அத்துடன் விவசாயத் திணைக்களப் பணிப்பாளருக்கு எதிராக ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்கு எதிராக திணைக்களப் பணியாளர்கள் சுகவீன விடுப்புப் போராட்டமும் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையிலேயே அங்கு முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகவும் அது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காகவும் மூன்று பேர் கொண்ட குழுவை ஆளுநர் நியமித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் கணக்காளர் விஷ்ணு, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிர்வாக அதிகாரி சாந்தசீலன், வட மாகாண விதை உற்பத்திக் கூட்டுறவு நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் சதீஷ் ஆகியோர் இந்த விசாரணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-27)

## கட்டுப்பாட்டு...

அரசாங்கத்தால் அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்ட ஏனைய பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படாவிட்டால் சில பொருள்களின் விலை மேலும் அதிகரிக்கக் கூடும் என நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரித்துள்ளது.

தற்போது அரிசிக்கான் கட்டுப்பாட்டு விலை மாத்திரமே அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக சந்தையில் ஏனைய பொருள்களுக்கான விலைகளை வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் அடிக்கடி அதிகரிப்பதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

பொதி செய்யப்பட்ட உற்பத்தி சார்ந்த பொருள்களின் விலைகள் அண்மைய காலமாக பல தடவைகள் அதிகரிக்கப்பட்டன. அரசாங்கத்தால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படாமையே இதற்கான காரணம் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பிஸ்கட், சவர்க்காரம், சலவைத் தூள், உடனடி நூடில்ஸ், சோயா உள்ளிட்ட பல பொருள்களின் விலைகள் தற்போது வெகுவாக அதிகரித்துள்ளன. அதிக விலை காரணமாக சில பொருள்களை நுகர்வோர் கொள்வனவு செய்வதைத் தவிர்த்து வருகின்றனர். இதன்காரணமாக அத்தியாவசியப் பொருள் உள்ளிட்ட ஏனைய உற்பத்திப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கப்பட வேண்டுமென நுகர்வோர் அதிகார சபை கோரியுள்ளது. (அ-ஒ-இ)

## கல்வி சமூகப்...

குரிய கலந்துரையாடல் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் இடம்பெற்றது.

கல்விச் சமூகம் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவை தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் வகையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டு தம் கருத்துக்களை முன்வைத்தனர். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைத் தீவன மூலப்பொருள் இறக்குமதிக்கு அனுமதிகோர முடிவு!

கால்நடை தீவனத்துக்காக சோளம்



மற்றும் சோயாவை இறக்குமதி செய்வதற்கு அனுமதி கோரி அமைச்சரவையில் பிரேரணையை சமர்ப்பிக்க விவசாய அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்போதைய பொருளாதார பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு கால்நடைத் தீவன உற்பத்திக்குத் தேவையான சோயா மற்றும் சோளத்தைக் கொள்வனவு செய்வதில் சந்தையில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதால் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. கால்நடைத் தீவனப் பற்றாக்குறையால் கால்நடை, கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ள னர்.

மக்களின் போசாக்கு நிலையை மேம்படுத்தத் தேவையான கால்நடை உற்பத்தித் திறனும் குறைந்துள்ளன என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமர வீர தெரிவித்துள்ளார். (எ-இ)


## தவறவிடப்பட்டது

கடந்த (17.08.2022) புதன்கிழமை கே.கே.எஸ் வீதிக்கும், யாழ்.மடத்தடி பகுதிக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் மூக்குக்கண்ணாடி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**077 117 4954**

## காணி விற்பனைக்கு

**யாழ் நாவற்குழியில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

XAL

## இலவச அழைப்பு

இந்த வாரம் வெள்ளிக்கிழமை (19.08.2022) மாலை 6.00 மணிக்கு நடைபெறும் ஒரு சிறு கூட்டத்திற்கு உங்களை வரவேற்கின்றோம்.

**இடம் மயிலூரான் அரங்கம், நல்லூர்**
**இல. 590, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**
**+94 777 922265**

**பொருள் :**
1) அபாகஸ் - கணித முறை வகுப்பு
2) பழங்கால வேதமுறை கணித சூத்திரங்கள் பயிற்றுவித்தல் வகுப்பு மற்றும்
3) ஆர்டிபிஷியல் இன்டலிஜென்ட் (AI) கணினி வகுப்புகளைப் பற்றிய விரிவான விளக்கக் கூட்டம்.

OBJECT AUTOMATION







**அனைவரும் வருக!!!**

(CS 20372) 1-6


# மரண அறிவித்தல்



## திருமதி வேல்முருகன் நாகேஸ்வரி (சொர்ணம்)

"வல்லியோடை" வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், செட்டி குறிச்சி பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேல்முருகன் நாகேஸ்வரி நேற்று (18.08.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டாக்டர் முத்துச்சாமி - ஞானபூங்கோதை தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான விதானையார் காசிநாதன் - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற புலவர் வேல்முருகன் (முன்னாள் ஆசிரியர், யாழ் பண்டத்தரிப்பு - பெண்கள் உயர் தரப் பாடசாலை) அன்பு மனைவியும், திருவரங்கன், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் உமா, பாலகாந்தன் (ஜேர்மன்), காலஞ்சென்ற காயத்திரி, கௌரிசங்கர் (ஜேர்மன்), சத்தியநாராயணன் (உரிமையாளர் Advanced. Technology System திருநெல்வேலி) சிவப்பிரியை (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான Dr. கோபாலசுந்தரம், Dr. ஞானசுந்தரம் மற்றும் புவனேஸ்வரி, கெங்கேஸ்வரி, சிவசுந்தரம் விமலேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், சற்குணவதி, கங்கேஸ்வரி (கொழும்பு), வதனி (ஜேர்மன்), நற்றியா (ஜேர்மன்), தாரணி (படவரைஞர்), ஸ்ரீவிஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், வேணுராஜ் (சப்ரகமுவ பல்கலைக்கழகம்), நகுல்ராஜ் (மொரட்டுவ - பல்கலைக்கழகம்), யதீசன் (INNO Data Lanka (PVT) ldt, Colombo), டினோஜன் (ஜேர்மன்), லற்றீசியப்பிரியா (ஜேர்மன்), லூக்கா ஜெந்தன் (ஜேர்மன்) அக்ஷயன் (யா/ யாழ். இந்துக் கல்லூரி), அஸ்வினி (யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), ஸ்ரீசுதன் (சுவிஸ்), டிலுக்ஷிகா (சுவிஸ்), சாய்யுதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 20348) (3/6)

தோற்றம்
20.01.1936

மறைவு
18.08.2022

செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு.
077 791 7831
021 225 0399

தகவல்:
பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.